# முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 74 பிரசோற்பத்தி தை 26 (09 • 02 • 1992) ஞாயிறு


## இருஅதிகாரிகள் உட்பட 11 இராணுவத்தினர் பலி

மட்டக்களப்பு சரடியனாற்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் இராணுவஅதிகாரி ஒருவரும் எட்டு சிப்பாய்களும் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது, வவுனியாவில் நடைபெற்ற சண்டையில் ஒரு படை அதிகாரியும் மூன்று இராணுவத்தினரும் பலியானதாகவும் அறிவிக்கப்படுகிறது. சரடியனாற்றில் விடுதலைப்புலிகளின் முகாமுக்கு அருகில் படையினர் வந்தபோது புலிகள் தாக்கிய தாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

★ 1987 - 1990 காலப்பகுதியில் இந்திய இராணுவம்

# 8000 தமிழர்களை கொன்றதாக

# இந்திய அரசுமீது வழக்கு

## அன்ரன் பாலசிங்கம் பி. பி. ஸிக்கு தகவல்

இந்திய இராணுவம் வடக்கில் நடத்திய படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது,

1987முதல் 1990வரை வடபகுதியில் இந்திய அமைதி காக்கும் படை தங்கியிருந்த போது சுமார் எண்ணாயிரம் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றதாக இந்திய அரசு மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப் போவதாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் அறிவித்துள்ளதாக பி, பி, ஸி. தெரிவித்தது

தமிழ் மக்களுக்கு எதிரான இந்தியப்படையினரின் இந்த மாபெரும் குற்றவியல் சம்பவங்கள் தொடர்பாக அரசியல் சாசன வழக்கறிஞர்கள் ஆராய்ந்து வருவதாக அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பி. பி, ஸிக்கு தெரிவித்தார்

### பிடியாணை பிறப்பித்தது அபகீர்த்தியைஏற்படுத்தவே

தலைவர் பிரபாகரன் மீது இந்திய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது புலிகளுக்கு ஒரு அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயல். இது எமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை.

இவ்வாறு கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்ததாக பி, பி. ஸி. அறிவித்தது.

தலைவர் பிரபாகரனைப் பிடிப்பதற்கு இந்திய அரசு இலங்கையின் உதவியை நாடினாலும் இலங்கை அரசினால் அதனை நிறைவேற்ற முடியாது. ஏனெனில் இதுவரை இலங்கைப்படை பிரபாகரனை நெருங்க முடியாமலிருக்கிறது. அப்படியான ஒரு முயற்சியில் இலங்கை அரசு இறங்கினால் அது விடு

—04 ஆம் பக்கம் பார்க்க

## வீரச்சாவு

சரடியனாறில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் அருணாதன் (தம்பிப்பிள்ளை பேரின்பராசா), ரவீந்தர் (சபாரத்தினம் உருத்திராதவன்) மயிலானார் ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

## குண்டு வெடிப்பு ஐவர் பலி

இந்தியாவில் பஞ்சாப்பில் இருந்து புதுடில்லி வந்து கொண்டிருந்த ரயிலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஐந்து பயணிகள் உயிரிழந்

...04 ஆம் பக்கம் பார்க்க

## இரு மீனவர்கள் மீது கடற்படை தாக்குதல்

முல்லைத்தீவு கடற்பகுதியில் நேற்று முன்தினம் மீன்பிடித்துக்கொண்டிருந்த இரு மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு இரணைப்பாலையைச் சேர்ந்த யேசுராசா, சின்னராசா ஆகியோரே தாக்கப்பட்டனராம்.

இருவரும் படையினரால் கடலில் தூக்கிவீசப்பட்டனரெனவும் தெரியவருகிறது.

## குவேக்கர்ஸ் குழு புலிகளுடன் பேச்சு

குவேக்கரின் சர்வதேச சமாதான இயக்க பிரதிநிதிகள் குழுவினர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்

ஜெனிவாவிலிருந்து வரும் இப்பிரதிநிதிகள் சிலதினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார்கள்

விடுதலைப்புலிகள் மக்கள்

— 04 ஆம்பக்கம் பார்க்க

## வடக்கில் யுத்தம் தொடர்வதை தேரோ விரும்பவில்லையாம்

வடக்கில் யுத்தம் தொடர்வதைத் தான் ஒருபோதும் விரும்பியதில்லையென மல்வத்தை பீட மகாநாயக்க தேரோ தெரிவித்துள்ளார்.

சமய ஸ்தாபனங்களின் தூதுக்குழு ஒன்று அவரைச் சந்தித்தபோதே தன் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி மேற்கண்டவாறு கூறினார்.

## 1500 பேரே தடுத்துவைப்பு

அரசுக்கு எதிரான நடவடிக்கைளில் ஈடுபட்ட 4700 பேர் கைது செய்யப்பட்டதாக பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

இவர்களில் 1500 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் விடுவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்,

## பயிற்சி நெறி ஆரம்பம்

கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தையல் வேலைப் போதனாசிரியர்களுக்கான பயிற்சி நெறி நாளை திங்கட்கிழமை காலை 10மணிக்கு நல்லூரிலுள்ள புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் நெசவுப் பயிற்சிப் பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த வைபவத்தில் யாழ் மாவட்ட அரச அதிபர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார். 06

### மனித உரிமை பற்றிய அறிக்கை

## பாரிஸ் மாநாட்டுக்கு பிரதமர் எடுத்துச் சென்றார்

பாரிஸில் நடைபெறும் உதவி வழங்கும் குழுக்கூட்டத்துக்கு ஸ்ரீலங்காவில் நிகழும் மனித உரிமை சம்பந்தமான முழு அறிக்கைகளையும், அரசியல் பொருளாதார நிலைமை பற்றிய விவரங்களையும் நிதி மந்திரி எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த அறிக்கைகள் பிரதம மந்திரி காரியாலயத்தில் தயாரிக்கப்பட்டதாக அமைச்சின் பேச்சாளர் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்

மேற்படி விவரத்தைச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்த அமைச்சரிடம் "மனித

...04 ஆம் பக்கம் பார்க்க

## பாரிஸில் கிடைத்த உதவி பிரயோசனமற்றது

இலங்கைக்கு பாரிஸ் மாநாட்டில் வழங்கப்பட்ட நிதி உதவியால் ஒரு பிரயோசனமும் இல்லை என சிங்கள பி பி ஸி தெரிவித்தது.

இந்த நிதி தனிப்பட்டவர்களின் தேவைகளுக்கே பயன்படுத்தப்படும் எனவும் பி பி ஸி தெரிவித்தது.

பிலிப்பைன்ஸ், பங்களாதேஷில் நடைபெற்றது போலவே இலங்கையிலும் இப்பணம் வீணாக்கப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

### பாஸ்கரலிங்கம் சொல்கிறார்

## 825 மில்லியன் டொலர் அபிவிருத்தி வேலைக்கு

உதவி வழங்கும் நாடுகள் தந்த 825 மில்லியன் டொலர் மூலம் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படும் என நிதியமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் பி, ஸிக்கு தெரிவித்தார்.

இந்த நிதியில் 90 வீதம் மக்களின் வாழ்க்கைச் செலவுக்கு பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார்

### பாதுகாப்புஅமைச்சு கோருகிறது

## பரு. துறைமுகத்தின் புகைப்படம் தேவையாம்

பருத்தித்துறை துறைமுகத்தை புனர்வாழ்வு அமைச்சின் நிதியிலிருந்து திருத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு நிபந்தனையுடன் அனுமதி வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துறைமுகத்தில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படுவ

... 04 ஆம் பக்கம் பார்க்க

## வரணி அரச வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

வரணி அரசினர் வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி -தென்மராட்சி எல்லைப்பகுதியில் உள்ள இந்த வைத்தியசாலைக்கு இரு பிரதேசங்களிலுமிருந்து

...04 ஆம் பக்கம் பார்க்க

## பாரிஸ் மாநாட்டின் போது தமிழ் இளைஞர் ஆர்ப்பாட்டம்

உதவி வழங்கும் நாடுகளின் பாரிஸ் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த போது இலங்கைத் தமிழ் இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்

மாநாட்டு மண்டபத்தின் முன்பாக இவர்கள் நின்[illegible] இலங்கை அரசுக்கு எதிராக கோஷமிட்டனர்.

இலங்கைக்கு உதவி வழங்க வேண்டாம், மனித உரிமைகள் மீறப்படுகின்றன, அப்பாவித் தமிழர் கொல்லப்படுகின்றனர் என்று அவர்கள் கோஷமிட்டனர்.

1987 இலும் முன்னாள் நிதியமைச்சர் றொனி டி மெல் இங்கு சென்றபோது அவரது [illegible] உடைக[illegible] குறிப்[illegible] டத்த[illegible]

## பிக்குகளுக்கும் புத்தருக்கும் உள்ள ஒரேயொரு ஒற்றுமை? 'விழிப்பு' இதழில் பதில்

ஸ்ரீலங்காவின் பிக்குகளுக்கும், கௌதம புத்தருக்கும் இடையே ஏதாவது ஒற்றுமை உண்டா?

ஆம் உண்டு - மஞ்சள் அங்கி மட்டுமே அது என்கிறது 'விழிப்பு' பத்திரிகை.

விடுதலைப் புலிகள் மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் வாராந்தப் பத்திரிகையான 'விழிப்பு' 05-02-92 முதல் வெளிவருகிறது.

'விழிப்பு' முதலாவது இதழில் காவற்துறைச் செய்திகள், மருத்துவம், கேள்வி பதில், 'மரத்தடி மணியம்' சித்திரம், மக்கள் எழுச்சி பற்றிய தியாகி திலீபனின் கருத்துக்கள், பலாலி முகாமினுள் பௌத்த பிக்குகள், கடற்றொழில் பாதிப்பு உட்பட பல விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.

## வர்த்தக பிரமுகர் கடத்தல்; கைதானவர் இராணுவ கப்டனாம்!

கடந்த வியாழக்கிழமை நுகேகொடையில் சிங்கள வர்த்தகப் பிரமுகரை கடத்திச் செல்ல முற்பட்ட வேளையில் பொதுமக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டவர் இராணுவத்தில் கப்டன் தரத்திலுள்ளவரென அரசு தற்பொழுது ஏற்றுக் கொண்டுள்ளது.

நிஸங்க டி. சில்வா என்ற இந்தப் பிரமுகரை இலக்கமில்லாத வாகனத்தில் வந்த இராணுவ அதிகாரி ஒருவர் கடத்த முயன்ற சம்பவம் தோல்வியுற்றமை குறித்த செய்தி 'முரசொலி' நேற்றைய பதிப்பில் இடம்பெற்றிருந்தமை தெரிந்ததே.

### சர்வதேச மகளிர் தினம்

சர்வதேச மகளிர்தினம் இம்மாதம் 8-ம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பலத்த எதிர்ப்பை அடுத்து இரணவில 5 நட்சத்திர ஹோட்டல் திட்டம் கைவிடப்பட்டது!

புத்தளம் மாவட்டத்திலுள்ள இரணவில என்ற கிராமத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்ட ஐந்து நட்சத்திர ஹோட்டல் திட்டத்தை கைவிடுவதென அரசு தீர்மானித்துள்ளது.

அத்துடன் இந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலுடன் அமைக்கப்படவிருந்த விளையாட்டரங்கு அமைப்பு வேலைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இரணவில கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களும் இலங்கை கத்தோலிக்க திருச்சபையும் தெரிவித்த கடும் எதிர்ப்பை அடுத்தே அரசு இந்த 'கைவிடும்' முடிவை எடுத்துள்ளது

எனினும் இரணவில 'வோய்ஸ் ஒப் அமெரிக்க' நிலைய அமைப்பு வேலை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வோய்ஸ் ஒப் அமெரிக்க நிலையத்தில் கடமை புரியவென இலங்கை வரவுள்ள அமெரிக்கர்களுக்கென குறித்த ஹோட்டலில் 50 அறைகளை ஒதுக்குவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப்புலி தலைவர்கள் விடயம்; வெளிநாட்டு அமைச்சில் உயர்மட்ட மகாநாடு!

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களை நீதிமன்றம் முன் நிறுத்த உதவுமாறு இந்தியா விடுத்த வேண்டுகோள் குறித்து நேற்று முன் தினம் கொழும்பில் வெளிநாட்டமைச்சில் இலங்கை அரச உயரதிகாரிகள் கூடி ஆராய்ந்ததாகத் தகவலொன்று தெரிவிக்கின்றது.

## கொழும்பு மாநகரில் மட்டும் 1350 தொடர் மாடிகள்!

கொழும்பு மாநகரப் பகுதியில் மட்டும் 1350 தொடர் மாடிகளும், வீடமைப்புத் திட்டங்களும் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த தொடர் மாடிகளிலும், வீடமைப்புத் திட்டங்களிலும் 20 ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் உள்ளன

இவ் விவகாரம் தொடர்பாகப் புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் டாக்டர் நெவில் கனகரட்ணவுடன், இந்திய வெளிவிவகார அமைச்சுக் காரியதரிசி ரஞ்சன் அபயகார் நடத்திய பேச்சின் விவரங்கள் குறித்தும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

புலிகள் இயக்கத் தலைவர்கள் விடயம் தொடர்பாக இந்த உயர்மட்டக்குழு ஆராய்ந்து தனது சிபார்சுகளை வெளிநாட்டமைச்சுக்கும், இலங்கை அரசுக்கும் அறிவிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## மத்தியதரைக் கடலில் மொராக்கோ கப்பல் மூழ்கி 300 பேர் பலி ஐரோப்பாவில் குடியேறவென சென்றவர்களே மரணமானவர்கள்

மத்தியதரைக் கடலில் நேற்று முன்தினம் பயணிகள் கப்பலொன்று மூழ்கியதில் அதில் பயணம் செய்த 300 பேரும் கொல்லப்பட்டதாக அஞ்சப்படுகிறது

மொராக்கோவிலிருந்து அகதிகளை ஏற்றிச் சென்ற கப்பலே மூழ்கியுள்ளது.

இவர்கள் ஐரோப்பிய நாடுகளில் குடியேறுவதற்காகச் சென்றுகொண்டிருந்தனர் என ஸ்பெயின் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சேவையிலுள்ள பட்டதாரிகளுக்கு பொதுநிர்வாக உயர் கல்வி!

பொதுநிர்வாகத்தில் பட்டப்பின்படிப்பு கல்வியை கற்பதற்கான வாய்ப்பை பொதுநிர்வாகத்துறையில் கடமையாற்றும் பட்டதாரிகளுக்கு வழங்க இலங்கை திறந்த வெளிப் பல்கலைக்கழகமும், இலங்கை அபிவிருத்தி கழகமும் முயற்சியை மேற்கொண்டு வருகின்றன.

முகாமைத்துவத்தில் பட்டம் பெற்றவர்கள் இக் கல்வியை கற்க விண்ணப்பிக்க முடியும் விரிவுரைகள் ஆங்கிலத்தில் நடாத்தப்படும் ஆனால் விடைகளை சிங்களத்திலும் தமிழிலும் எழுதலாம்

இந் நிகழ்ச்சித் திட்டம் ஒரு வருடத்துக்கான கல்வியைக் கொண்டிருக்கும். இதற்கான விரிவுரைகள் பங்குனிமாதம் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது இவ் வகுப்புக்கள் அனைத்தும் தொலைக் கல்வி முறையில் நடாத்தப்படவுள்ளன. (15)

### பாடுமீன் சாம்பியனானது

மயிலன்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட 7 வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் குருநகர் பாடுமீன் சாம்பியன் ஆனது.

இப் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த 6 ஆம் திகதி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற பொழுது பாடுமீன் அணி அதனை எதிர்த்து மோதிய 'திருமலை வீரர்' அணியை 4: 3 என்ற கோல்கள் அடிப்படையில் தோற்கடித்தது. 16

## அச்சுவேலியில் சம்பவம் ஓடும் போச்சு! ஓடும் சைக்கிளும்போச்சு!!

அச்சுவேலி சங்கானை வீதியில் அமைந்துள்ள மக்கள் இடம்பெயர்ந்த வீடுகளில் இரவு வேளைகளில் கூரை ஓடுகளைத் திருடும் செயல் அடிக்கடி இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன் அப்பகுதியிலுள்ள வீடு ஒன்றில் ஓடுகளை ஒரு கோஷ்டி திருடுவதை அவதானித்த சிலர் சத்தமிடவே, திருடர்கள் திருடிய ஓடுகளை மட்டுமின்றி தாம் கொண்டு வந்த மூன்று சைக்கிள்களையும் கைவிட்டுவிட்டு ஓடித்தப்பி விட்டனராம்.

இந்த சைக்கிள் மூன்றும் அச்சுவேலி மக்கள் முன்னணி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதுவரை எவரும் அவற்றை உரிமை கோரவில்லை. (43)

## 'அமைதியை ஏற்படுத்த வேண்டும்' நிபந்தனையில் 825 மில்லியன் உதவி

விரைவில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் இலங்கைக்குக் குறிப்பிட்ட தொகையை கடனாக வழங்க பாரிஸில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிபந்தனையின் பேரில் 825 மில்லியன் டொலர் நிதியை இலங்கைக்கு உதவியாக வழங்க இக்கூட்டத்தில் கலந்து கொண்ட நாடுகளில் பன்னிரண்டு இணங்கியுள்ளன.

அக் கூட்டத்தில் உரையாற்றிய உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கையில் அமைதி நிலவ வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியதுடன் மனிதஉரிமை பேணப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர்.

இலங்கைக் குழுவிற்கு தலைமை தாங்கி அக்கூட்டத்தில் பங்குபற்றிய பிரதமர் டி. பி. விஜயதுங்க பதிலுரை வழங்குகையில் 1991 இன் பிற்பகுதியில் இலங்கையில் பொருளாதார வளர்ச்சி சரிந்ததற்கு இராணுவத்திற்கு அதிக நிதி ஒதுக்கியமையே முக்கிய காரணமென்பதை ஏற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் இந்தியா, இத்தாலி, சுவிற்சலாந்து உள்ளிட்ட சில நாடுகள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டன.

## பொங்கல் வாழ்த்தால் வந்த அபாயம்!

கர்நாடகத் தாக்குதலின் போது தமிழர்களின் வீடுகளை அடையாளம் காண்பதற்கு குண்டர்கள் பல யுக்திகளைக் கையாண்டார்கள்.

அவற்றிலொன்று பெங்களூரில் வசிக்கும் தமிழர்களுக்கு தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்ட பொங்கல் வாழ்த்து அட்டைகளாகும்.

இந்த அட்டைகளில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரிகளைத் தேடிச் சென்ற குண்டர்கள் அங்கு இலகுவாகத் தமது தாக்குதல்களைத் தொடுத்தனராம்.

மற்றும் தபால் சேவகர்கள், பத்திரிகை, பால் விநியோக பையன்கள் இவர்களெல்லோரும் தமிழர் வீடுகளை அடையாளம் காணப் பயன்படுத்தப்பட்டனராம்.

### உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம்

உள்ளூர் உற்பத்திகளை அறிமுகப்படுத்தவும், சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும், அதன் மூலம் உள்ளூர் உற்பத்தி முயற்சிகளை ஊக்கப்படுத்துவதற்குமாக தமிழீழ ஆய்வு நிறுவனம் பல பகுதிகளிலும் விற்பனை நிலையங்களை அமைத்து வருகிறது.

இத் திட்டத்தின்படி கிளிநொச்சி நகரில் ''சோழன் பல்பொருள் அங்காடி'' விற்பனை நிலைய[illegible]க்கப்[illegible]டு சிறப்பா[illegible]வருகிறது.

### ஒய்வூதியர் ஒன்று கூடல்

வலிவடக்கு ஒய்வூதியர் சங்க வருடாந்த ஒன்றுகூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் இந்துமகளிர் வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

## தாய்க்கு பிள்ளைகள் கொடுத்தனர் பிரசவக்கூலி.. கோர்பச்சேவுக்குப் பென்ஷன்

ரஷ்யாவில் கொர்பச்சேவுக்கு ஏற்பட்ட நிலை குறித்து எழுதப்பட்ட மூன்று முத்தான புதுக்கவிதைகள் இவை:

★ அசுர விழுதுகளே
ஆலமரத்தை வீழ்த்திய
அதிசயக் கதையிது
இந்தச் சூறாவளியில்
ஒரு சமாதானப் புறாவே
காயம்பட்டது பரிதாபம்
ஒரு தேசத்தின் புதிய
விலாசத்தை
உலகமறியச் செய்த
மெழுகுவர்த்தியே
இங்கு தீக்கிரையானது!

★ கொர்ப்பச்சேவ்!
அவர்களை
மன்னித்துவிடு!
'எல்லோருக்கும்
சொர்க்கம் சொந்தம்'
என்றாய்
உன்னை மட்டும்
நரகத்துக்கு அனுப்பு
கிறார்கள்
'எல்லோர்க்கும் வேலை'
என்றாய்
உனக்கு மட்டும்
கட்டாய ஒய்வு தரு
கிறார்கள்!

★ ஆப்பசைத்த குரங்காய்
கொர்ப்பச்சேவ்...
இமைகளை உயர்த்திய
சோவியத் இமயம்
கூழாங்கல்லாய்...
அம்மா சாவுக்குச்
சிரிக்கும் குழந்தையாய்
மாஸ்கோ வாசிகள்...
இது தடுமாற்றம்தான் -
தடமாற்றம் அல்ல!

## எல்லைமீறல் ஊர்வலத்திற்கு ஆதரவு தெரிவித்து ஸ்ரீநகரில்

# பெரும்பேரணி! தேடப்படும் காஷ்மீர் தீவிரவாதி ஜாபீரும் பங்குபற்றினார்

எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாகிஸ்தானிலுள்ள காஷ்மீர் விடுதலை முன்னணியினர் எல்லை கடந்து வந்து இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பகுதிகளில் நடாத்தவுள்ள ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு ஆதரவு தெரிவித்து இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீநகரில் நேற்றுமுன்தினம் சுமார் 20 ஆயிரம் காஷ்மீர் மக்கள் திரண்டு மாபெரும் ஊர்வலமொன்றை நடாத்தி உள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### தேடப்படுபவர் பகிரங்கமானார்

மசூதி வழிபாட்டுடன் ஆரம்பமான இந்த மாபெரும் ஊர்வலத்தில் இந்திய இராணுவத்தினால் தேடப்படும் முக்கிய காஷ்மீர் தீவிரவாதத் தலைவரான ஜாபீர் அக்பர் மிலிட்டும் கலந்துகொண்டார்.

### தடுப்பவர்கள் எதிரிகளே

ஊர்வலத்தில் திரண்டிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றிய ஜாபீர் அக்பர் :"எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாகிஸ்தானிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ள பேரணியைத் தடுக்க முயல்பவர்கள் காஷ்மீரின் எதிரிகள் எனப் பிரகடனப் படுத்தினார்.''

### ஐ. நா.வின் தலையீடு தேவை

அத்துடன் காஷ்மீரில் இந்திய இராணுவம் புரியும் படுகொலைகளைத் தடுக்க ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டுமெனவும் பலத்த கரகோஷத்துக்கு மத்தியில் அக்பர் பகிரங்க கோரிக்கை விடுத்தார்,

### மக்களுக்குள் தலைமறைவானார்

ஜாபீர் அக்பர் பகிரங்கமாகத் தோன்றியது பற்றிய தகவலறிந்து அவரைக் கைது செய்ய இராணுவம் விரைந்தபோது மக்களுக்குள் அவர் மறைந்து தலைமறைவாகி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### பாக். தவறினால் இந்தியா செய்யும்

இதேவேளை பாகிஸ்தானில் இருந்து புறப்படவுள்ள காஷ்மீர் விடுதலை முன்னணியினரின் எல்லைகடந்து ஆர்ப்பாட்டம் செய்யும் பேரணியைத் தடுக்க வேண்டியது பாகிஸ்தானின் கடமையே எனவும் பாகிஸ்தான் தவறினால் இந்தியா அதைச் செய்யுமெனவும் புதுடில்லி அறிவித்துள்ளது.

## நாளை ...

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் அதன் பழைய மாணவர்களால் அமைக்கப்பட்ட புதிய கட்டிடத்தின் திறப்புவிழா நாளை திங்கட்கிழமை அதிபர் அநு. வை. நாகராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது

பிரதமவிருந்தினராக யாழ். கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கலந்துகொள்ளவுள்ள இவ் விழாவில் விடுதலைப்புலிகள் அரசியற் பொறுப்பாளர் ப. தமிழ்மாறன் (மூர்த்தி), யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ் கல்வி நிருவாகப் பொறுப்பாளர் அருண்மாஸ்ரர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# பட்டதாரி ஆசிரியர் வெற்றிடம் விரைவில் நிரப்பப்படும்!

சகல கோட்டக்கல்விப் பாடசாலைகளிலும் உள்ள ஆசிரிய தேவைகளை பாடவாரியாகக்குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சகல கோட்டக் கல்வி அதிகாரிகளையும் பணித்துள்ளார்

பட்டதாரி ஆசிரியர்கள் தொடர்பான தேவைகளை கலை, வர்த்தகம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்குரிய பட்டத்துக்கான வகையில் பிரித்து அறிக்கையை அனுப்பி வைக்குமாறும் அவர் மேலும் பணித்துள்ளார்.

இந்த விவரங்களை அடிப்படையாக வைத்தே பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அறியப்படுகிறது. (15)

# தொண்டர் ஆசிரியர் நியமனம் மட்டு. மாவட்டத்தில் நிறுத்தம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாகத் தொண்டர் ஆசிரியர்களை நியமிப்பதைக் கல்வி இராஜாங்க அமைச்சு இடைநிறுத்தியுள்ளது

அத்துடன் சமீபத்தில் வழங்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் குறித்து மீள் பரிசீலனை செய்யுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல்வாதிகளின் செல்வாக்கினால் தகுதியற்ற பலர் தொண்டர் ஆசிரியர் நியமனம் பெற்றுள்ளமை பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டதை யடுத்தே இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மட்டு - கொழும்பு இரவு ரயில் சேவை

# வாரத்தில் ஒரு தடவை மட்டும்!

மட்டக்களப்பிற்கும் கொழும்பிற்கும் இடையேயான இரவு ரயில் சேவை நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அடுத்தவாரம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது

வாரத்தில் ஒரு நாள் மட்டுமே இந்த இரவுநேர ரயில் சேவை நடைபெறும்.

காலையில் மட்டக்களப்பை வந்தடையும் ரயில் அன்றைய தினம் பிற்பகல் ஒரு மணிக்கு கொழும்பு கோட்டையை நோக்கி புறப்படக்கூடியதாக இதற்கான நேர அட்டவணை தயாரிக்கப்படவுள்ளது.

# இலங்கையில் 24மணி நேரமும் விரைவில் தொலைக்காட்சி ஒளிபரப்பு!

இலங்கையில் 24 மணிநேரமும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் பணியில் தனியார் கூட்டு நிறுவனமொன்று ஈடுபடவுள்ளது

இதற்கான ஒப்பந்தமொன்று நேற்றுக் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

இதற்குரிய புதிய தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையமொன்று பன்னிப்பிட்டியில் அமைக்கப்படவுள்ளது ஒளிகடத்தும் நிலையம் நுவரேலியாவில் அமையும்

இக்கட்டிட அமைப்புகளுக்குப் பல கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது,

# காஷ்மீர் எல்லைப் பகுதியில் பாக். இந்திய துருப்புக்கள் குவிப்பு!

காஷ்மீரின் இந்திய-பாகிஸ்தான் எல்லையில் கொந்தளிப்பு நிலை உருவாகி வருவதையடுத்து பாகிஸ்தானும், இந்தியாவும் அப்பகுதியில் பரஸ்பரம் தமது துருப்புக்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளன,

காஷ்மீர் எல்லைப் பகுதியில் உள்ள தனது துருப்புக்களின் எண்ணிக்கையை பாகிஸ்தான் 40 ஆயிரத்தினால் அதிகரித்துள்ளது.

இதன் மூலம் அப்பகுதியில் நிலை கொண்டுள்ள பாகிஸ்தான் துருப்பினரின் எண்ணிக்கை மூன்றேகால் இலட்சமாக அதிகரிக்கிறது

இந்திய இராணுவமும் எதற்கும் தயாரான நிலையில் அங்கு உள்ளதாக புதுடில்லியில் அறிவிக்கப்பட்டது.

# 'ஹெல உறுமய' அணிக்கு கட்சி மத்திய குழு தடை!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள ஒரு பிரிவினரால் அமைக்கப்பட்டுள்ள 'ஹெல உறுமய' அணியை சிங்கள தேசிய பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான அமைப்பு) தடை செய்வதென அக்கட்சியின் மத்திய குழு முடிவெடுத்துள்ளது.

இந்த 'தேசிய பாரம்பரியம்' அணியில் சுதந்திரக்கட்சியைச்சேர்ந்த 42 உறுப்பினர்கள் இணைந்துள்ளதாக முன்வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

களுத்துறை மாவட்ட எம். பி, யான திலக் கருணாரத்னாவே இந்த அணியின் அமைப்பாளரெனவும் கூறப்படுகிறது.

---

அரசியல் அவதானிப்புகள்:

# அப்பாவித் தமிழ்மக்கள் படுகொலைகள்

எஸ். ஜி. எம்.

கடந்த வாரம் கிழக்கு மாகாணத்திற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்ரன் வனசிங்க அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படுவதை ஆயுதப் படையினர் தவிர்க்க வேண்டுமென அவர்களுக்கு 'ஆலோசனை' வழங்கியுள்ளார்.

இந்தச் சிந்தனை கொக்கட்டிச்சோலை படுகொலை சம்பந்தமான அறிக்கையின் ஒரு பக்க விளைவாகவும் இருக்கலாம். சிறிலங்கா இராணுவ நடவடிக்கைவரலாற்றில் கொக்கட்டிச்சோலைப் படுகொலை விசாரணை ஆணைக்குழு ஒரு முக்கிய மைற் கல்லாகவே அமைகிறது

1991 ஜூன் 12 ஆம் திகதி கொக்கட்டிச்சோலையில் நிகழ்ந்த நிலக்கண்ணி வெடிச் சம்பவத்தில் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டும், இன்னுமொரு சிப்பாய் படுகாயமடைந்ததையும் தொடர்ந்தே கொக்கட்டிச்சோலைப்படுகொலை நடந்தது.

பல்வேறு மனித உரிமைகள் நிறுவனங்களின் கோரிக்கைகளின் பேரில் சிறிலங்கா ஜனாதிபதி 1991 ஜூன் 18 ஆம் திகதி ஓர் ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்தார்.

அந்தக் குழுவின் முதற் பகுதி அறிக்கை 1992 ஜனவரி 30 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

சில இராணுவச் சிப்பாய்களின் "கட்டுப்பாடற்ற நடவடிக்கை"யே 67 அப்பாவிப் பொதுமக்களின் படுகொலைக்குக் காரணம் என்றும், இப்படுகொலைகள் இராணுவ நடவடிக்கையினால் எழுந்ததல்ல என்றும் கொக்கட்டிச்சோலையில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரே இப்படுகொலைகளுக்குப் பொறுப்பு என்றும் இந்த ஆணைக்குழு முடிவு செய்திருக்கிறது.

கொக்கட்டிச்சோலைச் சம்பவம் நடைபெற்ற பின்னர் வெளிவந்த தகவல்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 120 இல் இருந்து 150 ஆக இருக்கலாமெனப் பொதுமக்கள் தரப்பில் கூறப்பட்டது.

ஆனால் சிறிலங்கா அரசு நியமித்த ஜனாதிபதி ஆணைக்குழு நியமனப் பிரகடனத்தில் 67 பொதுமக்கள் கொல்லப்பட்டது பற்றியே குறிப்பிடப்பட்டது. ஆணைக்குழு அறிக்கையும் 67 பொதுமக்கள் படுகொலை பற்றியே தனது முடிவைத் தெரிவித்திருக்கிறது.

உண்மையில் 67 அப்பாவிப் பொதுமக்கள்தான் கொல்லப்பட்டனரா, அல்லது அதற்கு மேலாகவும் கொல்லப்பட்டனரா என்பது தெளிவாக்கப்படவில்லை.

கிழக்கில் மட்டும் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் அந்தக் கொலைகளுக்கு யார் காரணம் என்று சிறிலங்கா அரசாங்கம் அறிவதற்காகப் பல ஆணைக்குழுக்களை நியமிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் உண்மை நிலை வெளிக் கொணரப்படும்

கொக்கட்டிச்சோலை படுகொலைகள் இராணுவ நடவடிக்கைகளினால் எழுந்ததா என்பது பற்றி அறிக்கையிட வேண்டுமென்பதும் ஆணைக்குழுவிற்கான விசாரணை விடயங்களில் ஒன்றாகும். இராணுவ நடவடிக்கையினால் இக்கொலைகள் நடைபெறவில்லையென விசாரணைக்குழு அறிக்கையிட்டுள்ளது. இராணுவ நடவடிக்கை காரணமாக எனின் இக்கொலைகள் நியாயப்படுத்தப்பட்டிருக்கும் - கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற கட்டுப்பாடற்ற இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்குவது தொடர்பாக ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையில் கருத்துத் தெரிவிக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழு சிபார்சு செய்தாலும் அரசு நட்டஈடு வழங்குமோ என்பது அடுத்த கேள்வி.

தமிழீழத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களின் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டனவே; அவற்றிற்கு நட்டஈடு வழங்குவது பற்றி தீர்மானிப்பது யார்?

கொக்கட்டிச்சோலை ஆணைக்குழு அறிக்கையை வெளியிட்டு தாம் இராணுவத்தின் மீது நடவடிக்கை எடுப்பதாகவும், நட்டஈடு வழங்குவதாகவும் உலகுக்குக் காட்ட சிறிலங்கா அரசு முயல்வதை கவனிக்காமல் இருக்கமுடியாது.

இந்தச் சம்பவத்தைத் தவிர அதற்கு முன்னும் பின்னும் கொல்லப்பட்ட எல்லா அப்பாவிப் பொதுமக்களும், அவர்கள் குழந்தைகளானாலும், பெண்களானாலும், வயோதிபர்களானாலும், மாணவ மாணவிகளானாலும், இளைஞர்களானாலும், பாவிகள், பயங்கரவாதிகள் என முத்திரை பதிக்கப்பட்டுவிட்டவர்களே.

அப்பாவியார் என்பதற்கு சிறிலங்கா அரசின் வியாக்கியானம் மிகவும் விசித்திரமானதாக இருக்கிறது

உண்மையாக மனித உரிமைகள் மீறல்களைக் கட்டுப்படுத்தவும், இராணுவ அட்டூழியங்களைத் தடுக்கவும் சிறிலங்கா அரசு விரும்பினால் ஆயுதப்படைகளினால் ஏற்படும் ஒவ்வொரு மரணம் தொடர்பாகவும், கைதிகள் காணாமற்போதல் நிகழ்வுகள் தொடர்பாகவும் விசாரணை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அப்படிச் செய்யப்படாதவரை கொக்கட்டிச்சோலை ஆணைக்குழு நியமனமும் அறிக்கைகளும் வெறும் கண்துடைப்பும், உதவி வழங்கும் நாடுகளைத் திருப்திப்படுத்துவதற்கான உத்தியுமே,

# பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் இடமாற்றமும் நியமனமும்

பண்டத்தரிப்புக் கோட்டத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக சின்னப்பிள்ளை வேலும்பிள்ளை மகேசவேலு கடந்த 01-02-1992 தொடக்கம் பதவி ஏற்றுள்ளார்.

இதுவரை பண்டத்தரிப்புக் கோட்டத்திற்குப் பொறுப்பாக இருந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப. சண்முகராசா யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுள்ளார்.

மருதனாமடக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளராகக் கடமை புரிந்த செ. தனஞ்சயன் ஓய்வு பெற்றுள்ளதைத் தொடர்ந்து சாவகச்சேரிக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் மருதனாமடக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளராகக் கடமை ஏற்றுள்ளார்.

சாவகச்சேரிக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக எஸ். சிதம்பரநாதன் பதவி ஏற்றுள்ளார். (20)

## இலங்கை நிர்வாக சேவை

# பகுதி 'ஆ' பரீட்சைக்கு தமிழர் அழைக்கப்படவில்லை

கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான இலங்கை நிர்வாக சேவைப்பகுதி 'ஆ' பரீட்சைக்கு எந்தவொரு தமிழரோ முஸ்லிமோ அழைக்கப்படவில்லை என கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

இனவிகிதாசாரப்படி ஆட்களை வேலைக்கு திரட்டும் அரசாங்கத்தின் கொள்கைக்கு இது விரோதமானது என அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவிடம் புகார் செய்யப்பட்டுள்ளது இப்பரீட்சையின் 'அ' பகுதி ஜனவரி 19 இல் நடாத்தப்பட்டபோது பல தமிழ், முஸ்லிம்கள் தோற்றிய போதிலும் இரண்டாவது பரீட்சையான 'ஆ'வுக்கு அழைக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தற்காலிக ஆசிரியர் தெரிவு விவரம் வெளியிடப்பட்டது

பண்டத்தரிப்புக் கோட்டத்துக்குட்பட்ட சகல கொத்தணிகள் மூலமாகவும் தெரிவு செய்யப்பட்ட தற்காலிக ஆசிரியர்களின் பெயர் விவரங்கள் கோட்டக்கல்வி நிலையத்தின் மூலமும், கொத்தணிப் பாடசாலைகளின் மூலாதாரப் பாடசாலை மூலமும் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி ஆசிரியர்கள் கொத்தணிகளிலுள்ள ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் ஒருவர் விதம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ் ஆசிரியர்களுக்குரிய பாடசாலைகளைக் குறித்தொதுக்கும் பணி அவ்வப் பகுதிக் கொத்தணி அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை திணைக்களத்தின் அனுமதியுடன் கற்பித்துக் கொண்டிருக்கும் வசதிக் கட்டண மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்க நிதி மூலமான ஆசிரியர்கள் தொடர்ந்தும் அவ்வப் பாடசாலைகளிலேயே கடமை புரிந்து கொண்டிருப்பர் எனவும் கல்வித் திணைக்கள வட்டாரத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது 20

# தற்காலிக ஆசிரியர்களுக்கு இருநாள்சேவை முன்பயிற்சி

பண்டத்தரிப்புக் கோட்டத்தின் மூலம் தெரிவாகியுள்ள தற்காலிக ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் சேவை முன்பயிற்சி நெறி நாளை 10ஆம் திகதி திங்கட்கிழமையும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளது.

இதன்படி காங்கேசன்துறை, தெல்லிப்பளை, அம்பனை, மல்லாகம், அளவெட்டிக் கொத்தணிகளைச் சேர்ந்த தற்காலிக ஆசிரியர்களுக்கு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும் ஏனைய கொத்தணிகளைச் சேர்ந்த தற்காலிக ஆசிரியர்களுக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் மேற்படி சேவை முன்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

சேவைக்காகத் தெரிவுசெய்யப்பட்ட சகலரும் தவறாது கலந்து கொள்ளும்படி பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி. வே. மகேசவேலு அறிவித்துள்ளார் (20)

## குவேக்கர்ஸ்..

முன்னணித்தலைவர் சோ. மகேந்திரராசா, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோருடன் இவர்கள் பேச்சு நடத்துவார்கள்

## வரணி...

தினமும் 200 நோயாளர்கள் சிகிச்சை பெறச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது

மருந்துகள் போதியளவு கிடைக்காததால் இந்த நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன 11

## பரு...

தற்கு முன்னுள்ள வடிவமைப்பையும், துறைமுகம் திருத்தப்பட்டதன் பின் உள்ள தோற்றத்தையும் கொண்ட புகைப்படப் பிரதிகள் தமக்குச் சமர்ப்பிக்கும்படி பாதுகாப்பு அமைச்சு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பிடியாணை..

தலை புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைச் சூழலை முற்றாக குழப்பிக்கச் செய்துவிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் கண்டி நேவிய நாடுகள் போன்றவை இனப்பிரச்சினைத் தீர்க்க ஆர்வம் காட்டிய போதிலும் அநாவசியத் தலையீடு என்று சொல்லி இந்தியா அவற்றைக் குழப்புவதில் முனைப்பாக இருக்கிறது என்று தெரிவித்த அவர் அரசுடன் பேச்சுவார்த்தையிலீடுபடுவதற்கு புலிகள் இயக்கம் எப்போதும் தயாராகவே இருக்கிறதென்றும் குறிப்பிட்டதாகவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

# குழந்தைகளின் பிறப்பு பதிவு கட்டாயமாகப் பதிய வேண்டும்

குழந்தை பிறந்த மூன்று மாத காலத்தினுள் அதன் பிறப்பு விவரங்களைப் பெற்றோர் கட்டாயமாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும் எனப் பதிவாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

வீட்டில் பிறந்தவர்கள் பற்றி அவ்வப்பகுதி கிராம சேவையாளருக்கு அறிவிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

குழந்தையின் பிறப்பைப் பதிவு செய்யாத பெற்றோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புல்ஜன்ஸ் வழக்கு ஒத்திவைப்பு

பேராசிரியர் ரால்ப் புல்ஜன்ஸ் கடத்தல் வழக்கு இம்மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்து வரும மேல நீதிமன்ற நீதிபதி ரி. பி உனம்புவ கடும் சுகயீனமாக தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாலேயே வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

## கற்பூர தீப திருவிழா

பிரசித்திபெற்ற நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் மணவாளக்கோல கற்பூரதீப திருவிழா இன்று நடைபெறுகிறது.

பகல் ஆயிரத்தெட்டுசங்குகளால் அபிஷேகமும், பிற்பகலில் சுவாமி ஊர்வலமும் நடைபெறும் என தேவஸ்தான பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்,

## விண்ணப்ப இறுதி நாள்

பருத்தித்துறை விநாயகர் தரும நிதிய அறநெறி விஞ்ஞான மன்றம் நடாத்தும் அறநெறிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 29ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமென விநாயகர் தரும நிதியம் அறிவித்துள்ளது. 11

## காங்கேசன் கொத்தணி தற்காலிக ஆசிரியர்கள்

காங்கேசன்துறைக் கொத்தணியில் இருந்து பத்துப்பேர் தற்காலிக ஆசிரியராகத் தெரிவாகியுள்ளனர்

செல்வி த. ரூபினி, செல்வி சி நிர்மலாதேவி, செல்வி ந. வனஜா, திரு. க வில்லவராஜன், செல்வி செ ரமணி, செல்வி இ ரேவதி, செல்வி க. விமலாதேவி, திரு க நவரத்தினம், திரு கருணேந்திரன், திரு: ந இரவீந்திரன் என்போரே தெரிவாகிய ஆசிரியர்கள்

மேற்படி ஆசிரியர்கள் தமது சேவைமுன் பயிற்சியைப் பெற எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் சமூகமளிக்குமாறு கொத்தணி அதிபர் அறிவித்துள்ளார். 20

## மாரிஸ்...

உரிமை மீறல் சம்பவங்களில் குற்றவாளியாகக் காணப்பட்ட உயர் பொலிஸ் இராணுவ அதிகாரிகள் வேலையிலிருந்து இளைப்பாற விடப்படுகிறார்களா என வினவப்பட்டபோது, குற்றச்சாட்டுகள் பரிசீலனை செய்யப்பட்ட பின்பே இளைப்பாற விடப்படுவார்கள் என்றார்

அவர் மேலும் பதிலளிக்கையில், குற்றச்சாட்டுச் சுமத்தப்படின் அதுபற்றிய விசாரணை நடைபெற வேண்டும் என்றார்.

தகவல் திணைக்களத்தினால் "மனித உரிமை மீறல் சம்பந்தமாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள்" இளைப்பாற விடப்படுவார்கள் என்ற அறிக்கைக்கும் அரசுக்கும் தொடர்பில்லையா எனக் கேட்ட போது, "நான் அந்த அறிக்கையை வாசிக்கவில்லை. குற்றம்சாட்டப்பட்டவர்கள் விசாரணையில் குற்றவாளிகளாகக் காணப்படல் வேண்டும் அதன் பின்பே தண்டனை ...க்கும் என்றார்.

## நோர்வேக்கு இளைஞர்களைக் கடத்திய தமிழ் இளைஞனுக்குச்சிறை

நோர்வேநாட்டினுள் பதின்மூன்று ஸ்ரீலங்காத் தமிழர்களைச் சட்ட விரோதமாகக் கடத்திக் கொண்டு வந்த குற்றச் சாட்டின் பேரில் 27வயதுடைய ஸ்ரீலங்காத் தமிழ் இளைஞர் ஒருவருக்கு நீதிமன்றம் ஒருவருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது

சட்ட விரோதமாக நாட்டினுள் நுழைந்த 13 தமிழர்களும் உடன் நாடுகடத்தப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவு இட்டது,

சட்டவிரோதமாக நோர்வேக்குப் போன 13 பேரும் ஏஜென்சிக்கு 350 000 ரூபா கொடுத்ததாக பொலிசுக்குக் கொடுத்தவாக்கு மூலத்தில் தெரிவித்தனர்.

## ஆசிய ஆபிரிக்க நூல் வெளியீட்டாளரின் மாநாடு

ஆசிய ஆபிரிக்க பிராந்தியத்தைச் சேர்ந்தபுத்தக வெளியீட்டாளர்களின் மாநாடு புதுடில்லியில் நேற்று கூடியது

ஆசியஆபிரிக்க புத்தக சபை ஏற்பாடு செய்த இந்த இருநாள் மாநாடு நேற்றுத் தொடங்கிய போது நூற்றுக்கு மேற்பட்ட புத்தக வெளியீட்டாளர்களும், புத்தக நிபுணர்களும் சர்வதேச நிதியங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் இப் பிராந்திய நாடுகளின் புத்தக மேம்பாட்டுக்கான பரஸ்பர ஒத்துழைப்புக் குறித்து வழிவகை காணப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பாராளுமன்றம் வெள்ளி அரை மணி நேரம் ஒத்திவைப்பு

பாராளுமன்றம் நேற்று முன்தினம் அரை மணி நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்களின் திருத்தச்சட்ட மசோதா சமர்ப்பிக்கப்பட்ட போது ஐக்கிய சோஷலிஸ எம். பி. அதாவுட செனிவிரட்ன ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பினார்.

கூட்டுறவு சங்க அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு பரவலாக்கப்பட்டதால் இந்தச் சட்ட மூலத்தை மாகாண சபைகளுக்கு அனுப்பி விவாதித்து நிறைவேற்ற பட்ட பின்னரே பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும் என அவர் சொன்னார்.

## கே.பி.ரட்நாயக்கா சபைத் தலைவர்

பாராளுமன்றம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது சபாநாயகர் உப சபாநாயகர் குழுக்களின் பிரதித் தலைவர் ஆகியோர் இல்லாததால் அனுராதபுரம் மாவட்ட சு. க. எம்பியான கே. பி. ரட்நாயக்கா சபைக்கு சில மணிநேரம் தலைமை தாங்கினார்.

## காம்ப் டேவிட் உடன்பாடு இஸ்ரேல் கட்டுப்படாதாம்

1987ஆம் ஆண்டுகைச்சாத்திடப்பட்ட காம்ப் டேவிட் ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளை இஸ்ரேல் கடைப்பிடிக்காதென பிரதமர் ஷமீர் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனியருக்கு தன்னாட்சி உரிமைவழங்குவது சம்பந்தமாகபேச்சு வார்த்தை நடைபெறும் இவ் வேளையில் இஸ்ரேலில் உள்ள இராஜதந்திரிகளிடையே ஷமீர் இவ்வாறு பேசியுள்ளார்

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பல பகுதிகளில் புதியகுடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் இஸ்ரேல் இராணுவம்சில பகுதிகளிலிருந்து பின்வாங்க வேண்டுமென்ற அந்த ஒப்பந்தத்தின் நிபந்தனையை இஸ்ரேல் கடைப்பிடிக்க மறுக்கிறது என பி. பி ஸி தெரிவித்தது

காம்ப் டேவிட் உடன்பாடு அளிக்கப்பட்ட உரிமைகளே மிகக்குறைவு அதையும் இஸ்ரேல் கடைப்பிடிக்க மறுக்கிறதாக பலஸ்தீனியப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்

## குண்டு...

தனர், 20 பேர் காயமடைந்தனர்

இதேநேரம் புதுடில்லியில் ரோந்து சென்ற பொலிஸார் மீதும் தீவிரவாதிகள் குண்டுகள் வீசித் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## குடியரசுகளிடையே கருத்து மோதல்

1954ஆம் ஆண்டில் அப்போதைய சோவியத் யூனியன் பிரதமர் நிகிட்டா குருஷேவினால் உக்ரெய்ன் குடியரசுக்கு வழங்கப்பட்ட கிறிமியா நிலப்பகுதி தொடர்பாக ரஷ்யாவுக்கும் உக்ரெய்னுக்குமிடையே கருத்து மோதல் ஏற்பட்டிருப்பதாக பி பி.ஸி தெரிவித்தது.

கிறிமியா நிலப்பகுதியை உக்ரெய்னுக்கு வழங்கப்பட்டது சட்டபூர்வமானதுதானா என்பதையிட்டு ஆராய ஒரு விசாரணைக்குழு அமைக்க வேண்டும் என்று ரஷ்ய நாடாளுமன்றம் அண்மையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்தே இக்கருத்து முரண்பாடு வெளிப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது,

இப்பத்திரிகை [torn] சொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் [torn] வனத்தின [torn] கல்விளங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் [torn] ள அச்சக [torn] 992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது,